# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2005/11 - 2017 පෙබරවාරි මස 07 වැනි අඟහරුවාදා - 2017.02.07

2005/11 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ 21/ 1978*(x)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரிஎல்ல ஆகிய நான், அக்குவைனஸ் கொலேஜ் ஒவ் ஹயர் ஸ்டடிஸ் தொடர்பில், மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின்கீழ் அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும் 2005 ஆம் ஆண்டு ஒற்றோபர் 6 ஆந் திகதிய 1413/ 21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையை இக்கட்டளையால் பின்வருமாறு திருத்துகின்றேன் :*

*(1) அக்கட்டளைக்கான அட்டவணையை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய அட்டவணையை இடுவதன் மூலமும் :-*

**அட்டவணை**

| | *நிரல் I*<br>பட்டங்கள் | *நிரல் II*<br>பட்டங்களுக்கான சுருக்கெழுத்துக்கள் |
|---|---|---|
| (1) | கலை இளமாணி | பீ.ஏ |
| (2) | சமய கற்கைகளில் கலை இளமாணி | பீ. ஏ (சமய கற்கை) |
| (3) | தகவல் தொழில்நுட்ப இளமாணி | பீஐரி |
| (4) | உளவியல் மற்றும் உளநலத்துறையில் விஞ்ஞான இளமாணி | பீஎஸ்சி (உளவியல் மற்றும் உளநலத்துறை) |
| (5) | விவசாய கைத்தொழில் முகாமைத்துவத்தில் கௌரவ விஞ்ஞான இளமாணி | பீஎஸ்சி கௌரவ (விவசாய கைத்தொழில் முகாமைத்துவம்) |

*(2)* நிரல் I இல் பதிவு இல. *(5)* மற்றும் நிரல் II இல் நேரொத்த பதிவையும் பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைய ஆக்குவதன் மூலமும் :-

"அக்குவைனஸ் கொலேஜ் ஒவ் ஹயர் ஸ்டடிஸ் ஆனது-

*(அ)* இந்நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பிக்க முன்னர் தேவைப்படும் தகைமைகளையுடைய குறைந்தது ஆறு *(6)* பொருத்தமான கல்வியாளர்களை நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் அத்தகைய தகைமைகளின் ஆதாரத்தினை குறித்துரைக்கப்பட்ட அதிகாரிக்குச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

*(ஆ)* வர்த்தமானியில் இக்கட்டளையின் வெளியீட்டுத் திகதியிலிருந்து ஆறு மாதங்கள் *(6)* முடிவடைவதற்கு முன்னர் பயனுள்ளவகையில் நிகழ்ச்சித் திட்டத்தை நடத்துவதற்கு போதியளவு நூலகத்தில் இயைபான பாடத்தின்மீது எழுதப்பட்ட புத்தகங்களின் கிடைப்பனவை எண்பித்து குறித்துரைக்கப்பட்ட அதிகாரிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.".

லக்ஷ்மன் கிரிஎல்ல,
உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்.

கொழும்பு,
*2017*, பெப்புருவரி *03*.

*2-849*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.